# DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778 / 2019 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 9 |
| Name | திரு. மணிகண்டசேதுபதி |
| Father Name | தமிழ்செல்வன் |
| Village | திருநெல்வேலி |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 26 |

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்) )**

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-01-2025.(நேரம்: 12.54PM )

**முதல்விசாரணை**

1. நான் தற்போது சுத்தமல்லியில் உள்ள காந்திநகரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் மார்கெட்டிங் எக்ஸ்கியூட்டிவ் ஆக தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன்.

3. புகார்தாரர் பரமேஸ்வரியை எனக்கு தெரியும்.

4. 21.01.2019 ஆம் தேதியில் தைப்பூசத்திற்கு செல்வதற்காக திருச்செந்தூர் போய்விட்டு திருநெல்வேலி வரும்போது நானும் , எனது உறவினர்கள் 6 பேரும், ஆமுனி காரில் வரும்போது செய்துங்கநல்லூர் போலிஸ் குவார்டிசிற்கு அருகில் மாருதி 800 என்ற கார் எதிரே வந்து மோதி விபத்து ஏற்பட்டது.

5. எனக்கு அன்கான்சசியஸ் ஆக ஆகிவிட்டது . வண்டியில் உள்ளவர்களுக்கு அடிப்பட்டது.

6. இந்த விபத்திற்கு யார் காரணம் என்றால் எதிரே வண்டி ஓட்டிவந்த பச்சைபெருமாள் வேகமாக வந்தததால் விபத்து ஏற்பட்டது.

7. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 12.59PM)**

**1.** நான் சென்ற வாகனத்தில் எத்தணை பேர் இருந்தோம் என்று கேட்டால் என்னுடன் சேர்த்து 7 பேர் இருந்தோம்.

2. மாருதி ஆமுனி வாகனத்திற்கு அரசால் வழங்கப்பட்ட அனுமதி 4+1 நபர்கள் மட்டும் தான் என்றால் சரிதான்.

3. அந்த தேதியில் மேற்படி வாகனத்தில் 12 நபர்கள் பயணம் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

4. மாருதி ஆமுனி வாகனம் என்பது டி போர்டு போடப்படாத தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வாங்கப்பட்ட வாகனம் என்றால் சரிதான்.

5. விபத்துகுள்ளான வண்டியில் வந்த காயம்ப்பட்ட நபர்களின் பெயர் , விலாசம் தெரியுமா என்றால் தெரியாது,

6. மேற்கண்ட விபத்துக்குள்ளான வண்டியில் பயணம் செய்த நபர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்று கேட்டால் மேலபாட்டம் ஆகும்.

7. அன்றைய தினம் விபத்துக்குள்ளான வண்டி வாடகை வாகனமாக அழைத்து வரப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

8.மேற்படி வாகனத்தில் பயனம் செய்த நபர்கள் கீழபாட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் எனது உறவினர் இல்லை என்பதால் தான்அவர்கள் ஊர் மேலபாட்டம் என தவறாக சொன்னேன் என்றால் சரியல்ல.

9. வாகனம் வாடகை வாகனம் என்பதால் தான் மேற்கண்ட விபத்துக்குள்ளான வண்டியில் பயணம் செய்த நபர்களின் பெயர் , ஊர், விலாசம் ஆகியவை என்னால் சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

10. எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமணை சென்றேனா என்றால் சென்றேன்.

11. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

12. போலிசார் விசாரித்தப்போது எனக்கு காயம் இல்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை.

13. வாகனத்தின் கொள்ளவிற்கு அதிகமாக நபர்கள் இருந்த காரணத்தினால் வாகனம் வளைவாக இருந்த இடத்தில் வேகமாக பயணம் செய்த போது கட்டுப்பாட்டை இழந்து விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

14. எதிரி வாகனத்தை வேகமாக ஓட்டி வந்ததாக நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

15. நான் சொன்ன தேதியில் , சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை ்என்று சொன்னால் சரியல்ல.

16. விபத்திற்கு நாங்கள் பயணம் செய்த வாகனத்தை ஓட்டி வந்த என்னுடைய கவன குறைவு காரணமாக தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

17. எதிரிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | STC 778 / 2019 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 10 |
| Name | திரு. தங்கபாண்டி |
| Father Name | முருகன் |
| Village | சுத்தமல்லி |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 47 |

**<u>(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )</u>**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 07-01-2025.(நேரம்: 01.10PM )**

**<u>முதல்விசாரணை</u>**

1. நான் தற்போது சுத்தமல்லியில் உள்ள சத்யா நகரில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன்.

3. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள எம் தங்கபாண்டி என்ற கையெழுத்து என்னுடையது தான்.

4. கடந்த 21.01.2019 ஆம் தேதி மாருதி ஆமுனி TN76C2473 accident ஆனதில் செய்துங்கநல்லூர் காவல் நிலையத்திற்கு என்னை அழைத்தார்கள்.

5. செய்துங்கநல்லூர் காவல் நிலைய குடியிருப்பில் இருந்து 100 மீ குள் பாளத்திற்கு அருகே வைத்து போலிசார் வரைபடம் வரைந்து என்னை கூப்பிட்டு கையெழுத்து வாங்கினார்கள். **அந்த பார்வைமகஜர் அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. இந்த** விபத்தில் காயமடைந்த நபர்கள் இருந்த வாகனத்தில் உரிமையாளர் நான் தான்.

2. அந்த வாகனம் ஓன்போர்டு வண்டி என்று சொன்னால் சரிதான்.

3. அதை வாடகைக்கு அனுப்ப முடியாது என்றால் சரிதான்.

4. மேற்படி ஆமுனி வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்று கேட்டால் 6 பேர் பயணம் செய்தார்கள்.

5. அவர்கள் பெயர், விலாசம் தெரியுமா என்றா'ல் 2 நபர்கள் பெயர்மட்டும் தெரியும். கோபாலசமுத்திரத்தில் உள்ள நபர்களின் பெயர் மட்டும் தெரியும், அவர்கள் வெள்ளை பாண்டி , பரமேஸ்வரி ஆகும்.

6. என்னுடன் வேறு யாராவது கையொப்பம் செய்தார்களா என்றால் அவர்களது பெயர், விலாசம் எனக்கு தெரியாது.

7. பார்வைமகஜரில் காவல் நிலையம் எவ்வளவு தூரத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை நான் படிக்கவில்லை , படித்துப்பார்க்காமல் கையெழுத்து போட்டேன்.

8. அவர்களும் படித்துக்காண்பிக்கவில்லை அதனால் கையொப்பம் இட்ட ஆவணத்தில் என்ன எழுதி உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.போலிசார் கேட்டவுடன் நான் கையொப்பம் போட்டுவிட்டேன்.

9. விபத்துகுள்ளான வாகனம் எனது வாகனம் என்பதால் நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு முதல் விசாரணையில் சம்பவ இடத்தில் கையொப்பபம் இட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் எங்கை வைத்து கையொப்பம் செய்தேன் என ஞாபகம் இல்லை.

10. நான் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.